# நீங்கள்

# ஏன்

# ஒரு

# கிறிஸ்தவனாக

# இருக்கிறீர்கள்?

# நீங்கள்
# ஏன் ஒரு கிறிஸ்தவனாக
# இருக்கிறீர்கள்?

# பொருளடக்கம்

அத்தியாயம் 1

**கிறிஸ்தவன் யார்?.................................... 1**

அத்தியாயம் 2

**தேவன், முழு உலகத்தையும் இந்த காலப்பகுதியிலேயே மாற்ற முயற்சி செய்கிறாரா?.............................. 8**

அத்தியாயம் 3

**ஒரு கிறிஸ்தவனின் அழைப்பு.......................... 12**

அத்தியாயம் 4

**புதிய ராஜ்யம்............................................ 18**

அத்தியாயம் 5

**சகோதரரே, நீங்கள் அழைக்கப்பட்ட அழைப்பைப் பாருங்கள்............................................ 23**

அத்தியாயம் 1

# கிறிஸ்தவன் யார்?

ஆமெரிக்கா மற்றும் ஐரோப்பாவில் பெரும்பாலான ஜனங்களும் மற்ற தேசங்களில் சிறுபான்மையானவர்களும் தங்களை கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக்கொள்கின்றனர். நீங்கள்? ஒரு வேளை நீங்கள் அப்படி இல்லாமல் இருக்கலாம். இதில் இன்னும் ஆச்சரியம் என்னவெனில், அமெரிக்கா மற்றும் ஐரோப்பாவில் சிறைச்சாலைகளில் உள்ள குற்றவாளிகளில் அநேகர் கூட தங்களை “கிறிஸ்தவர்கள்” என்று சொல்லிக்கொல்கிறார்கள்.

சுமார் எவ்வளவு காலத்திற்கு முன்பு “கிறிஸ்தவர்கள்” அடையாளம் காணப்பட்டார்கள்? “கிறிஸ்தவன்” என்ற பெயர் கிபி முதலாம் நூற்றாண்டில் பெந்தெகொஸ்தே நாளிலிருந்து 5 வருடங்களுக்கு பின்பு வந்தது. “முதன் முதலில் அந்தியோகியாவிலே சீஷர்களுக்குக் கிறிஸ்தவர்கள் என்கிற பேர் வழங்கிற்று." அப்.11:26;13:1 “அந்தியோகியா சபை”யில் உள்ள கிறிஸ்தவர்கள் “சீஷர்கள்” என்றும் அழைக்கப்பட்டனர். “சபை” என்றால் “அழைக்கப்பட்டவர்கள்.” “சீஷன்” என்றால் “கற்றுக்கொள்பவன் (அ) மாணவன்” அல்லது, ஆசிரியரை பின்பற்றுகிறவன்” என்று பொருள். ஆகவே “கிறிஸ்தவர்கள்” என்றால் இந்த உலகத்தில் இருந்து இயேசு கிறிஸ்துவை பின்பற்றுகிறவர்களாகவும், அவருடைய மாணாக்கர்களாகவும் “அழைக்கப்பட்டவர்கள்” என்பது ஆகும்.

அமெரிக்கா மற்றும் ஐரோப்பா இன்னும் பிறநாடுகளில் உள்ள கோடிக்கணக்கான ஜனங்களும் உண்மை கிறிஸ்தவர்கள் ஆக முடியுமா? இயேசு கிறிஸ்து, “நான் உங்களை உலகத்திலிருந்து தெரிந்து கொண்டபடியினாலும், உலகம் உங்களைப் பகைக்கிறது,” என்று (யோவான் 15:19) கூறுகிறார். அவர், தம்மை பின்பற்றுபவர்களை, “சிறுமந்தை” என்று குறிப்பிடுகிறார். (லூக்கா 12:32) இயேசு கிறிஸ்து, தன்னை பின்பற்றி வருகிற சீஷர்களுக்கு கடினமான நிபந்தனைகளை வைத்தார்.

## கிறிஸ்தவர்கள் என்ன செய்கிறார்கள்?

இயேசு கிறிஸ்துவின் சீஷர்கள், சத்தியத்தை அறிந்து, அதற்கு கீழ்ப்படிவார்கள். இயேசு, யோவான் 8:31,32ல் “நீங்கள் என் உபதேசத்தில்

நிலைத்திருந்தால் மெய்யாகவே என் சீஷராயிருப்பீர்கள்; சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும்" என்று கூறியுள்ளார். இயேசுவின் சீஷர்கள், அவரது உபதேசத்தில் நிலைத்திருப்பார்கள்; அதாவது அநுதினமும் வேதாகமத்தை வாசிப்பார்கள்; அவர்கள் சத்தியத்தை அறிகிற அறிவை அடைவார்கள்; அதன்பின், அவருடைய சீஷர்களாயிருப்பதற்கு தங்களுக்கு உண்டான எல்லாவற்றையும் வெறுப்பார்கள்.(லூக்கா 14:33) மேலும் மாற்கு 8:35ல் "தன் ஜீவனை இரட்சிக்க விரும்புகிறவன் அதை இழந்துபோவான், என்னிமித்தமாகவும் சுவிசேஷத்தினிமித்தமாகவும் தன் ஜீவனை இழந்து போகிறவன் அதை இரட்சித்துக் கொள்ளுவான்" என்று இயேசு கூறியுள்ளார். அதாவது நம்முடையவைகள் அனைத்தையும், கிறிஸ்துவுக்கு ஒப்புக்கொடுத்து, அவருடைய சித்தத்தின்படி, அதை அவருடைய ஊழியத்துக்கு பயன்படுத்த வேண்டும். மேலுமாக, சீஷத்துவத்துக்கான கடினமான உபதேசங்களை பற்றி லூக்கா 14:26ல் காணலாம். ஒருவன் தன் தகப்பனையும் தாயையும் மனைவியையும் பிள்ளைகளையும் சகோதரரையும் சகோதரிகளையும், தன் ஜீவனையும் வெறுக்காவிட்டால் (குறைவாக அன்பாயிருத்தல்) "எனக்குச் சீஷனாயிருக்கமாட்டான்" என்றும், மேலும் லூக்கா 9:23ல் "ஒருவன் என் பின்னே வரவிரும்பினால் அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை அநுதினமும் எடுத்துக் கொண்டு, என்னைப் பின்பற்றக் கடவன்" என்றும் குறிப்பிட்டுள்ளார்.

ஒரு கிறிஸ்தவனாக இருப்பதற்கு, இயேசு, தன்னுடைய சீஷர்களுக்கு கொடுத்த கட்டளைகள், மெய்யாகவே, அதிகாரபூர்வமானவைகள். "சிறுமந்தை" மட்டும் தான் தகுதியடைய முடியும் என்று இயேசு கிறிஸ்து முன் குறித்துள்ளாரா? ஆம், மத்தேயு 7:22,23-ல் சொல்லப்பட்டது போல, அநேகர், தங்களை கிறிஸ்தவர்கள் என்று கூறிக்கொள்வார்கள். "அந்நாளில் அநேகர் என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! உமது நாமத்தினாலே தீர்க்கதரிசனம் உரைத்தோம் அல்லவா? உமது நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்தினோம் அல்லவா? உமது நாமத்தினாலே அநேக அற்புதங்களைச் செய்தோம் அல்லவா? என்பார்கள். "அப்பொழுது நான் ஒருக்காலும் உங்களை (கிறிஸ்தவர்களாக) அறியவில்லை; அக்கிரமச் செய்கைக்காரரே, என்னைவிட்டு அகன்று போங்கள் என்று அவர்களுக்குச் சொல்வேன்" என்றார்.ஆம் சீஷத்துவத்துக்கான

நிபந்தனைகள் அதிகார பூர்வமானவைகள். உண்மையான கிறிஸ்தவர்கள், தங்கள் ஆரோக்கியத்திற்காகவும், வருமானத்திற்காகவும் தேவனை தேடமாட்டார்கள். மாறாக, இந்த வாழ்க்கையில் நூறுமடங்கு ஆவிக்குரிய ஆசீவாதங்களையும் மறுமையில் நித்திய ஜீவனையும் பெற்றுக்கொள்வார்கள்.(மாற்கு 10:30)

உலக கலாச்சாரத்தில் "கிறிஸ்தவர்கள்" என்பது பெரும்பாலனோரை குறிப்பதாக இருக்கிறது. ஆனால் வேதத்தின்படி கிறிஸ்தவர்கள் என்பது சிறப்பாக வாழ்க்கை முறையைக் கொண்ட சிறுபான்மையினரை குறிப்பதாக இருக்கிறது. நிச்சயமாக கோடிக்கணக்கான ஜனங்கள், கிறிஸ்துவிற்காக, எல்லாவற்றையும் இழக்கவில்லை. ஆனால், நீங்கள் இயேசுவை பின்பற்ற எல்லாவற்றையும் விட்டுவிட்டீர்களா?

## ஏன் சிலர் கிறிஸ்தவர்களாக மாறுகின்றனர்?

சிலர் கிறிஸ்தவர்களாக மாறுவதற்கு காரணம் நித்திய நியாயத்தீர்ப்பை குறித்த பயமாகும். "பாவத்தின் சம்பளம் மரணம்; தேவனுடைய கிருபை வரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினால் உண்டான நித்திய ஜீவன்." (ரோமர் 6:23) ஆனால் தேவன் நம்மை இரட்சித்து, நம்முடைய பாவங்களை "அவருடைய நாமத்தின் நிமித்தம்" மன்னிக்கிறார். (சங்கீதம் 25:1) இதைப்போலவே பவுல், எபேசி 1:7ல் "அவருடைய (தேவனுடைய) கிருபையின் ஐசுவரியத்தின்படியே, இவருடைய இரத்தத்தினாலே பாவமன்னிப்பாகிய மீட்பு இவருக்குள் நமக்கு உண்டாயிருக்கிறது" என்று கூறுகிறார்.

மேலும் சிலர், தங்களுடைய சுய லாபத்திற்காகவும், சுயஜீவியத்திற்காவும், செல்வாக்கிற்காகவும், கிறிஸ்தவர்களாக மாறுகின்றனர். அவர்கள் "இரகசிய ராஜ்யத்தின்" மீது நம்பிக்கை வைத்து,அதின் மூலம் தங்களுடைய தேவைகள் பூர்த்தி செய்யப்படும் என்றும் விசுவாசிக்கின்றனர். எவ்வளவு துக்கமான காரியம்! கிறிஸ்தவர்களின் மேன்மை "தேவன் நமக்கு என்ன செய்ய போகிறார்" என்பதை குறித்து இல்லாமல், "நாம் தேவனை மகிமைப்படுத்த என்ன செய்யவேண்டும்" என்பதை பொருத்தே இருக்கிறது. சங்கீதம் 31:3 ஐ நினைவு கூறுவோம், "உமது நாமத்தின் நிமித்தம் எனக்கு வழிகாட்டி, என்னை நடத்தியருளும்."

# சுயநலமுள்ள கிறிஸ்தவர்களும் உண்மைக் கிறிஸ்தவர்களும்

கொரிந்து சபையில், சுயநலமுள்ள கிறிஸ்தவர்கள் அநேகர் இருந்தனர். இவர்களை பவுல், 1 கொரி. 4:8-14ல் கண்டித்து குறிப்பிட்டுள்ளார்:

"இப்பொழுது திருப்தியடைந்திருக்கிறீர்களே, இப்பொழுது ஐசுவரியவான்களாயிக்கிறீர்களே, எங்களையல்லாமல் ஆளுகிறீர்களே; நீங்கள் ஆளுகிறவர்களானால் நலமாயிருக்கும்; அப்பொழுது உங்களுடனே கூட நாங்களும் ஆளுவோமே. எங்களுக்குத் தோன்றுகிறபடி தேவன் அப்போஸ்தலர்களாகிய எங்களை மரணத்துக்குக் குறிக்கப்பட்டவர்கள் போலக் கடைசியானவர்களாய்க் காணப்படப்பண்ணினார்; நாங்கள் உலகத்துக்கும் தூதருக்கும் மனுஷருக்கும் வேடிக்கையானோம்.நாங்கள் கிறிஸ்துவினிமித்தம் பைத்தியக்காரார், நீங்கள் கிறிஸ்துவில் புத்திசாலிகள்; நாங்கள் கனவீனர். இந்நேரம் வரைக்கும் பசியுள்ளவர்களும், தாகமுள்ளவர்களும், நிர்வாணிகளும் குட்டுண்டவர்களும், தங்க இடமில்லாதவர்களுமாயிக்கிறோம். எங்கள் கைகளினாலே வேலை செய்து பாடுபடுகிறோம்; வையப்பட்டு, ஆசீர்வதிக்கிறோம்; துன்பப்பட்டு சகிக்கிறோம். தூஷிக்கப்பட்டு, வேண்டிக் கொள்கிறோம்; இந்நாள் வரைக்கும் உலகத்தின் குப்பையைப் போலவும், எல்லாரும் துடைத்துப் போட்டுகிற அழுக்கைப் போலவுமானோம். உங்களை வெட்கப்படுத்தும் படிக்கு நான் இவைகளை எழுதவில்லை, நீங்கள் எனக்குப் பிரியமான பிள்ளைகளென்று உங்களுக்கு புத்திசொல்கிறேன்."

இங்கு சுயநலமுள்ள கிறிஸ்துவர்களை, உண்மைக் கிறிஸ்தவர்களாகும்படி பவுல் கண்டித்துக் கூறுகிறார். "ஆகையால் என்னை பின்பற்றுகிறவர்களாகுங்களென்று உங்களுக்குப் புத்திசொல்லுகிறேன். நான் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறது போல, நீங்கள் என்னைப் பின்பற்றுகிறவர்களாயிருங்கள்." (1கொரி.4:16;11:1) கிறிஸ்துவின் மாதிரிகளை பின்பற்றியதால், பவுலுக்கு பொருளாதாரத்தில் தரித்திரமும், தேவனுடைய ஊழியத்தை செய்யும் போது, இயேசு தரித்திரத்தை அநுபவித்தாரா? "அவர் ஐசுவரியமுள்ள வராயிருந்தும், நீங்கள் அவருடைய தரித்திரத்தினாலே ஐசுவரியவாங்களாகும் படிக்கு,உங்கள் நிமித்தம் தரித்திரரானாரே." (2 கொரி.8:9)

கிறிஸ்தவர்கள் “ஐசுவரியவான்களாக வேண்டும்.” எங்கிற தேவனுடைய திட்டத்தை நிறைவேற்றும் பிரதிநிதியாக இயேசு கிறிஸ்து “தரித்திரத்தை” அனுபவித்தார். ஆனால் இயேசு செழுமையானவர் என்று அவர்கள் கூறுகின்றனர். அவருடைய முந்தைய பரலோக மகிமையை ஒப்பிட்டுப் பார்க்கும்போது, அவர் உண்மையில் தரித்திரர் ஆனார். இயேசு தன்னுடைய தரித்திரத்தை குறித்து, லூக்கா 9:58ல் “நரிகளுக்குக் குழிகளும் ஆகாயத்துப் பறவைகளுக்குக் கூடுகளும் உண்டு குமாரனுக்கோ தலைசாய்க்க இடமில்லை என்றார்.” இந்த காரியத்தை, இயேசு தன்னிடத்தில் வந்து, “ஆண்டவரே நீர் எங்கே போனாலும் உம்மைப் பின்பற்றி வருவேன்” என்று முந்தைய வசனத்தில் கூறிய சீஷன் ஒருவனிடம் சொன்னார். இயேசுவை பின்பற்றினால், தரித்திரத்தில் வாழவேண்டும் என்று அர்த்தம் அல்ல. அதற்கு பதிலாக நமக்குரிய எல்லாவற்றையும், பண ஆசையையும், எல்லா செல்வாக்கையும் இயேசுவிற்காக தியாகம் செய்வதாகும். நீங்களும் உங்களுக்கு சொந்தமான எல்லாவற்றையும் கிறிஸ்துவுக்கு ஒப்புக்கொடுத்திருக்கிறீர்களா?

கிறிஸ்துவத்தை தங்கள் சுயலாபத்திற்காக உபயோகிக்கிறவர்களை, “இப்பிரபஞ்சத்தின் தேவனான பிசாசு” (2கொரி.4:4) கிறிஸ்துவை சார்ந்த கிறிஸ்தவர்களாக வாழ்வதற்கு பதிலாக, சுயநலமுள்ள கிறிஸ்தவர்களாக வாழ அவர்கள் விரும்பும்வரை, அவர்களுக்கு “வெள்ளித்தட்டில் உலகத்தை” கொடுக்க ஆவல் உள்ளவனாய் இருக்கிறான்.(மத்தேயு 4:8-11)

இயேசு கிறிஸ்து தம்முடைய ஊழிய வாழ்க்கையில் சுயத்தையும், இச்சைகளையும் தியாகம் செய்து, தம்முடைய பரலோகபிதாவின் சித்தத்தை செய்ய தம்மை முழுவதும் ஒப்புக்கொடுத்து வாழ்ந்தார். மேலும் அதற்காகவே “தம்முடைய ஆத்துமாவை மரணத்திலூற்றினார்.” (எபி.10:9;ஏசாயா 53:12) வேதாகமம், இந்த பலியின் ஜீவியத்தை விளக்க அநேக அடையாளங்களைக் குறிப்பிடுகிறது.

உதாரணமாக, மிருகங்களின் பலியை குறித்து, ஆசாரிப்புக் கூடாரத்தில் காண்கிறோம். அதே போல இயேசுவின் முழுக்கு ஞானஸ்நானம்,பிதாவின் சித்ததை செய்ய தம்மை முழுமையாக

ஒப்புக்கொடுப்பதை சித்தரிக்கிறது. ஞானஸ்நானத்திற்கு பிறகு மூன்று வருடங்கள் கழித்து,இயேசு, “ஆகிலும் நான் முழுகவேண்டிய ஒரு ஸ்நானமுண்டு, அது முடியுமளவும் எவ்வளவோ நெருக்கப்படுகிறேன்” என்று லூக்கா 12:50ல் கூறுகிறார். இயேசு கிறிஸ்து, பிதாவின் சித்தத்தை செய்ய தன்னை முழுமையாக அர்ப்பணித்தார் என்பது, எல்லாருக்காகவும் தன்னை தியாகம் செய்து (அப்போ.20:35) சத்தியத்தின் நிமித்தமும் உபத்திரவப் பட்டு (சங்.69:7-9) சிலுவையை சகித்தார் (எபிரே 12:2,3) என்பதன் மூலம் தெரிகிறது.உமது மகிமையிலே, எங்களில் ஒருவன் உமது வலது பாரிசத்திலும், ஒருவன் உமது இடது பாரிசத்திலும் உட்கார்ந்திருக்கும்படி அருள் செய்ய வேண்டும் என்று யாக்கோபும், யோவானும் கேட்டபொழுது, இயேசு, “நான் குடிக்கும் பாத்திரத்தில் நீங்கள் குடிக்கவும், நான் பெறும் ஸ்நானத்தை நீங்கள் பெறவும், உங்களால் கூடுமா? என்றார்.(மாற்கு 10;35-39) நாமும், யாக்கோபை போலவும், யோவானைப்போலவும் கிறிஸ்துவின் உபத்திரவமாகிய பாத்திரத்தில் பானம் பண்ணவும், அவருடைய மரணத்திற்குள்ளான ஞானஸ்நானத்தில் பங்குபெறவும் வேண்டும். இதைத்தான் பவுல், “நாம் அவரோடே கூட மரித்தோமானால், அவரோடே கூடப் பிழைத்துமிருப்போம்; அவரோடே கூடப் பாடுகளை சகித்தோமானால் அவரோடே கூட ஆளுகையும் செய்வோம்” (2 தீமோத்தேயு 2:11,12) என்று கூறுகிறார். கிறிஸ்துவனாக வாழவேண்டும் என்பதன் அர்த்தம்,சுயபோக ஜீவியத்தில் வாழ்வது என்று அல்ல, மாறாக, கடைசி வரை கிறிஸ்துவோடு கூட பாடுகளை சகிப்பது ஆகும்.

## நாம் கிறிஸ்தவர்கள் என்பதன் காரணம்

ரோமர் 6:3ல் பவுல், நம்முடைய உண்மை ஞானஸ்நானத்தைப் பற்றிக்கூறும் போது, “கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா?” என்று கேட்கிறார். ஆம், நாமும், சுயத்திற்கு மரித்து, இயேசு கிறிஸ்துவின் பலியின் ஜீவியத்தை பின்பற்றவேண்டும். அதாவது, இந்த உலகத்தின் சந்தோஷமும், ஆசைகளும் தேவனுடைய ஊழியத்தைச் செய்வதில் பாவமாக இராவிட்டாலும் ஆசைகளை தியாகம் செய்து வாழவேண்டும்.

1 கொரி 15:29ல் பவுல், கிறிஸ்துவர்களை குறித்து,

“மரித்தவர்களுக்காக ஞானஸ்நானம் பெறுகிறவர்கள்” என்று கூறுகிறார். தேவனுடைய பார்வையில், மனுக்குலத்தில், கிறிஸ்தவர்களைத் தவிர,மற்ற ஜனங்கள் “அக்கிரமங்களினாலும் பாவங்களினாலும் மரித்தவர்கள்” (எபேசி.2:1) ஆக இருக்கிறார்கள். ஆகவே தான் கிறிஸ்து, “மரித்தோர் தங்கள் மரித்தோரை அடக்கம் பண்ணட்டும்”(மத்தேயு 8:22)என்று கூறுகிறார். நீங்கள் ஏன் கிறிஸ்தவாராக இருக்கிறீர்கள்? கிறிஸ்துவின் மரணத்தில் பங்குபெறுவதன் மூலம் முழுமனுக்குலமும் ஆசீவதிக்கப்படும். நீங்கள் இயேசுவோடு கூட பாடுகளை அனுபவித்து, மரித்தால் (மரித்தோருக்காக ஞானஸ்நானம் பெற்றால்) அவரோடு கூட எழுப்பபப்பட்டு (2 தீமோ 2:11,12) ராஜாக்களாகவும், ஆசாரியர்களாகவும், ஆயிரம் வருடங்கள் ஆட்சிசெய்து(வெளி.20:6) மரித்த (மரித்துக் கொண்டிருக்கிற) மனுக்குலம் முழுவதையும் ஆசீர்வதிப்பீர்கள்.

சுருக்கமாக, வேதம் கூறுவதாவது: (1) உண்மை கிறிஸ்தவர்கள் எண்ணிக்கையில், மிகக்குறைவாக ஒரு சிறுமந்தையாக இருப்பார்கள். (2) சீஷர்களுக்கான நிபந்தனை கடினமானதாகும். (3)கிறிஸ்துவர்கள், கிறிஸ்துவின் பூமிக்குரிய ஆயிரம் வருட அரசாட்சியில் அவரோடு கூட ஆளுகை செய்து, மரித்து நிலையில் உள்ள இந்த மனுக்குலத்தை ஆசீர்வதிப்பார்கள்.

*அத்தியாயம் 2*

# தேவன், முழு உலகத்தையும் இந்த காலப்பகுதியிலேயே மாற்ற முயற்சி செய்கிறாரா?

இயேசு, “இராஜ்யத்தினுடைய இந்தச் சுவிசேஷம் பூலோகமெங்குமுள்ள சகல ஜாதிகளுக்கும் சாட்சியாகப் பிரசங்கிக்கப்படும், அப்போது முடிவு வரும்”(மத்தேயு 24:14) என்று வாக்கு தத்தம் பண்ணினார். இந்த காலம் மட்டுமே சகல ஜனங்களுக்கும் இரட்சிப்பு உண்டாகும் காலம் என்று இந்த வாக்குத்தத்தம் கூறுகிறதா? பொதுவாக, எல்லாரும் மற்றும் ஒவ்வொருவர் ஆகிய இரண்டு வார்த்தைகளும் வேதாகமத்தில் முக்கியமான வார்த்தைகள் ஆகும். லூக்கா 2:10ல் தேவதூதன், இயேசுவின் பிறப்பை குறித்து கூறும் போது, “இதோ, எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன்” என்று கூறினான். வசனம் 30 மற்றும் 31, எல்லா ஜனத்துக்குமான இரட்சிப்பைக் குறித்து கூறுகிறது. 1 தீமோத்தேயு 4:10, “எல்லா மனுஷருக்கும் இரட்சகர்” தேவன் என்று வேதம் கூறுகிறது.

இயேசு கிறிஸ்து எல்லோருக்காகவும் மரித்த பொதுவான கருத்தை 1 கொரி 15:22ல் காணலாம். “ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறது போல, கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள்.” இதைபோலவே, ரோமர் 5:18ஐ பார்க்கும் போது, “ஒரே மீறுதலினாலே எல்லா மனுஷருக்கும் ஆக்கினைக்கு ஏதுவான தீர்ப்பு உண்டானதுபோல, ஒரே நீதியினாலே எல்லா மனுஷருக்கும் ஜீவனை அளிக்கும் நீதிக்கு ஏதுவான தீர்ப்பு உண்டாயிற்று” என்று மனுஷருக்கும் ஜீவனை அளிக்கும் நீதிக்கு ஏதுவான தீர்ப்பு உணடாயிற்று” என்று குறிப்பிடப்பட்டுள்ளது. தகப்பனாகிய ஆதாம் பாவம் செய்ததால், அவனது அரையிலிருந்த பிறவாத சந்ததியும் பாவத்திற்குள்ளானது. ஆதனால் தான் எல்லாரும் பாவத்திலும், துர்க்குணத்திலும் உருவாகி (சங்கீதம் 51:5) மரணத்திற்கு பாத்திரரானார்கள். அனுபவமின்மையால் ஆதாம் கீழ்ப்படியாமைக்குள்ளாவான் என்று தேவன் அறிந்திருந்தார். இதனை, 1பேதுரு 1:19, 20ல் காணலாம். அதாவது, ஆதாம்

சிருஷ்டிக்கப்படுவதற்கு முன்னே, குறிக்கப்பட்டிருந்த கிறிஸ்துவின் இரத்ததைக் குறித்து கூறுகிறது. ஆகவே, ஆதாமுக்குள் எல்லாரும் மரித்ததால், இயேசு கிறிஸ்து “தேவனுடைய கிருபையினால் ஒவ்வொருவருக்காகவும், மரணத்தை ருசிபார்க்கவேண்டியது” அவசியமாயிற்று. (எபிரே.2:9)

யோவான் 1:17ல் இயேசு கிறிஸ்துவைக் குறித்து, “தன்னால் எல்லாரும் விசுவாசிக்கும்படி அந்த ஒளி” என்று கூறப்பட்டுள்ளது. வசனம் 9ல் அவரைக் குறித்து “உலகத்திலே வந்து எந்த (ஒவ்வொரு) மனுஷனையும் பிரகாசிப்பிக்கிற ஒளியே அந்த மெய்யான ஒளி” என்றும் கூறப்பட்டுள்ளது. இது எப்படி சாத்தியமாகும்? கோடான கோடி ஜனங்கள், கிறிஸ்துவுக்கு முன் மரித்துள்ளனரே. அவர்கள் ஒருபோதும் அந்த மெய்யான ஒளியை கண்டதில்லை! அவர்கள் இயேசு என்னும் நாமத்தையும் கேள்விப்பட்டதில்லை. இயேசு மரித்தபின்னும் மரித்துபோன கோடிக்கணக்கானோர், “நாம் இரட்சிக்கப்படும் படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே கட்டளையிடப்பட்ட அவருடைய ஒரே நாமத்தை” ஒருபோதும் கேள்விப்படவில்லை. (அப்போ. 4:12) நீங்கள் வேதாகமத்தை விசுவாசிக்கிற கிறிஸ்துவர்களானால், ஒருவரும் தங்கள் அறியாமையினால் இரட்சிக்கப்படாமல், இயேசுவை தங்கள் இரட்சகராக ஏற்றுக்கொள்வதன் மூலமே இரட்சிக்கப்படுவார்கள் என்பதை அறிந்திருக்கிறீர்கள். இது ஒரு முரண்பாடான கருத்தாக தோன்றுகிறது. இதற்கான பதில் 1 தீமோத்தேயு 2:5,6ல் “………எல்லாரையும் மீட்கும் பொருளாகத் தம்மை ஒப்புக்கொடுத்த மனுஷனாகிய கிறிஸ்து இயேசு அவரே; இதற்குரிய சாட்சி ஏற்ற காலங்களில் விளங்கி வருகிறது” என்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது. இயேசு “எல்லருக்காகவும்” மரித்தார் என்பது ஒரு தெளிவான கருத்து. இயேசு “எல்லருக்காகவும்” மரித்தார் என்றால், ஏன், எல்லாருக்கும் இந்த நற்செய்தியை கேட்கும் வாய்ப்பு கொடுக்கப்படவில்லை? இதற்கு பொருத்தமான பதில் – “ஏற்ற காலங்கள்” என்ற பதத்தில் இருக்கிறது. எல்லாரையும் மீட்கும் பொருளாகிய கிறிஸ்துவின் சாட்சி “ஏற்ற காலங்களில்” விளங்கி வருகிறது என்று கூறப்படுள்ளது. இந்த கிறிஸ்துவ யுகமே தேவன் சபையாக அழைத்தவர்களுக்கு ஏற்ற காலமாக இருக்கிறது. மற்ற எல்லா ஜனங்களுக்கும், கிறிஸ்துவின் ஆயிரம் வருட அரசாட்சியே, ஏற்ற காலமாக இருக்கிறது.

தற்காலம், அனைவரும், இயேசுவின் நாமத்தை கேட்பதற்குரிய காலம் அல்ல. இயேசு கிறிஸ்துவின் முதலாம் வருகைக்கும் இரண்டாம் வருகைக்கும் இடைப்பட்ட காலத்தில் தேவன் உலகத்தை மாற்ற முயற்சி செய்யவில்லை. அப்படிச் செய்தார் என்றால், அவர் தோல்வி தான் அடைய நேரிடும். ஏறத்தாழ இரண்டாயிரம் வருடத்திற்கு பிறகு,உலகின் மூன்றில் ஒரு பங்கிற்கும் குறைவான ஜனங்களே, தங்களை கிறிஸ்தவர்கள் என்று கூறிக்கொள்கின்றனர். உண்மை என்னவெனில், சுவிசேஷம் இவ்வுலகிற்கு சாட்சியாக அறிவிக்கப்படும் என்று தான் இயேசு கூறியுள்ளாரே ஒழிய, இந்த யுக முடிவுக்கு முன் உலகம் மாற்றப்படும் என்று குறிப்பிடவில்லை.

மாற்கு 4:11,12 வசனங்கள், தேவன் இவ்வுலகத்தை, இப்பொழுது, மாற்ற முயற்சி செய்யவில்லை என்பதை சிறப்பாக எடுத்துக்காட்டுகிறது. இயேசு தன்னுடைய சீஷர்களிடம், "தேவனுடைய ராஜ்யத்தின் இரகசியத்தை அறியும்படி உங்களுக்கு அருளப்பட்டது; புறம்பே இருக்கிறவர்களுக்கோ இவைகளெல்லாம் உவமைகளாகச் சொல்லப்படுகிறது. அவர்கள் குணப்படாதபடிக்கும், பாவங்கள் அவர்களுக்கு மன்னிக்கப்படாதபடிக்கும், அவர்கள் கண்டும் காணாதவர்களாகவும், கேட்டும் உணராதவர்களாவும் இருக்கும்படி, இப்படிச் சொல்லப்படுகிறது" என்றார். இந்த வேதாகமப் பகுதியை நன்கு சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இயேசு எல்லாருக்காகவும் மரித்தார் என்றால், ஏன் தேவனே அநேகர் வேதாகமத்தை முற்றிலும் புரிந்து கொள்ள முடியாத படியாத படிக்கும், குணப்படாதபடிக்கும், பாவங்கள் அவர்களுக்கு மன்னிக்கப்ப்டாதபடிக்கும் ஏற்பாடு செய்திருக்கிறார்? வேதாகமம், சாதாரண பாடபுத்தகத்தை போல எழுதப்படவில்லை. தேவன், வேதாகமத்தை, விசேஷித்தவிதமாக அடையங்களினாலும் உவமைகளினாலும் எழுதி இருக்கிறார். ஆகவே தான், அநேகர் குணப்படாமலும், பாவங்கள் மன்னிக்கப்படாமலும் இருக்கின்றனர். இதனால் தான், 250க்கும் மேற்பட்ட கிறிஸ்துவ மத அமைப்புகளும், அவற்றுள் அநேக வித்தியாசமான கருத்துகளும் காணப்படுகின்றன. தேவன் இந்த காலத்தில் உலகைத்தை மாற்ற முயற்சிக்கவில்லை; ஆனால், "சிறுமந்தையை" மட்டும் அழைக்கிறார். மனிதனுடைய நித்திய நிலைமை தற்போது வேதாகம அறிவைப் பொறுத்து இருந்தால்,

வேதாகமம் மிக சுலபமாக, அனைவராலும் புரிந்து கொள்ளத்தக்கதாக நமது அன்பின் தேவனால் உருவாக்கப்பட்டிருக்கும்.

அப்போஸ்தலர் 15:14-17, “தேவன் புறஜாதிகளின்று தமது நாமத்திற்காக ஒரு ஜனத்தைத் தெரிந்து கொள்ளும்படி (அனைவரையும் அல்ல) முதன்முதலில் அவர்களுக்குக் கடாட்சித்தருளினார். ....அதற்குத் தீர்க்கதரிசிகளுடைய வாக்கியங்களும் ஒத்திருக்கிறது. மற்ற மனுஷரும், என்னுடைய நாமத்தரிக்கப்படும் சகல ஜாதிகளும், கர்த்தரைத் தேடும் படிக்கு நான் இதற்குப்பின்பு திரும்பி வந்து (இரண்டாம் வருகை) விழுந்து போன தாவீதின் கூடாரத்தை மறுபடிக்கும் எடுப்பித்து (தேவனுடைய ராஜ்யத்தை ஸ்தாபித்தல்) கட்டுவேன்.” இயேசு கிறிஸ்துவின் மரணத்திற்கு பின்பு, முழுமனுக்குலத்தையும் மாற்றுகிற வேலையை தேவன் செய்யவில்லை. அதற்கு பதிலாக, “அவர் தம்முடைய நாமத்திற்காக” ஒரு ஜனத்தை தெரிந்து கொள்கிறார். இந்த மேலான அழைப்பிற்கு அழைக்கப்படாத மற்ற மனிதர்களுக்கு தேவனுடைய ராஜ்யத்தில் தேவனை தேடுகிற வாய்ப்பு வழங்கப்படும்.

அத்தியாயம் 3

# ஒரு கிறிஸ்தவனின் அழைப்பு

புதிய ஏற்பாடு, தொடர்ச்சியாக, கிறிஸ்தவர்களை “சபை” என்றே அழைக்கிறது. “சபை” என்று, மொழிப்பெயர்க்கப்பட்ட கிரேக்க வார்த்தையின் அர்த்தமானது, “ஆழைக்கப்பட்டவர்கள்” என்பதனை நினைவு கூறுங்கள். மற்றொரு விதமாக சொல்லப்போனால், ஒரு சிறு கூட்டத்தினரை, ஒரு பெரிய மனுகுலத்தினின்று அழைப்பதாகும். மிக முக்கியமாக, தேவன் கிறிஸ்தவர்களுடன் வைத்திருக்கும் தொடர்பை சுட்டிக்காட்டும் விதமாக, வேதாகமம் “தெரிந்துகொள்ளப்பட்டவர்கள்.” “தெரிந்துகொண்டவர்கள்,” “தெரிந்து கொள்ளுதல்” என்ற வார்த்தைகளை உபயோகப்படுத்துகின்றது. மத்தேயு 24:21; ரோமர் 8:33; கொலோசெயர் 3:12; 1பேதுரு 1:2; 2பேதுரு 1:10 மற்றும் 2தீமொத்தேயு 2:10 ஆகியவைகள் இதற்கு எடுத்துக்காட்டுகளாகும். எந்த வார்த்தையானது, பூமியின் சகல ஜனங்களும் ஆயிரம் வருட அரசாட்சியில் இரட்சிப்புக்கான சந்தர்ப்பத்தை பெறுவதற்கு முன்பாகவே, இந்த மனுகுலத்தில் இருந்து ஒரு சிறுகூட்டத்தின் (சிறுமந்தை) விசேஷித்த தெரிந்து கொள்ளுதலை விவரிக்கிறது.

விசேஷித்த அழைப்பு அல்லது சபையை தேர்ந்தெடுத்தல் என்றால் என்ன? கிறிஸ்துவின் ராஜ்யத்தில் கிறிஸ்தவர்கள், நியாயாதிபதிகளாகவும், ஆசாரியர்களாகவும், ராஜாக்களுமாகவும், உத்தியோகம் செய்ய அழைக்கப்படுகின்றனர். என்ன ஒரு மகிமையான காரியம்! முதலாவது நம்முடைய விசுவாசம் தடுமாறுகிறது. ஆனால், நம்முடைய வேதம் இந்த காரியத்தைப் பற்றி தெளிவாக எடுத்துரைக்கிறது. 1கொரி.6:2 கூறுகிறாவது: பரிசுத்தவான்கள் உலகத்தை நியாயந்தீர்ப்பார்களென்று அறியீர்களா?” 1 பேதுரு 2:9, கிறிஸ்துவர்கள், “ராஜரீகமான ஆசாரியக் கூட்டம்” என்று கூறுகிறது. இதேபோல், வெளி.1:6 மற்றும் 5:10ல் எங்களை ராஜாக்களும் ஆசாரியர்களுமாக்கினீர்; நாங்கள் பூமியிலே அரசாளுவோம்” என்று காண்கிறோம். வெளி 20:6, கிறிஸ்துவர்கள் “தேவனுக்கும் கிறிஸ்துவுக்கும் முன்பாக ஆசாரியராயிருந்து, அவரோடே கூட ஆயிரம் வருஷம் அரசாளுவார்கள்” என்று கூறுகிறது.

நியாயாதிபதிகள், ஆசாரியர்கள், ராஜாக்கள்! எவ்வளவு சிறப்பான பதவிக்கு கிறிஸ்தவர்கள் அழைக்கப்படுகின்றனர்! இப்படிப்பட்ட மேலான பதவியை அடைய,கிறிஸ்தவர்கள் எப்படிப்பட்ட கடுமையான பயிற்சியை மேற்கொள்ள வேண்டிய அவசியமாக இருக்கிறது! நீங்கள் ஒரு கிறிஸ்துவனாக இருந்து, தேவன் உங்கள் வாழ்கையில் கிரியைசெய்து, இந்த சிறந்த பதவிக்கு உங்களை தகுதி படுத்துவதை காண்கிறீரா?

## நியாயாதிபதிகள்

கிறிஸ்தவர்கள், கிறிஸ்துவோடுசேர்ந்து, பூமியை நியாயந்தீர்ப்பார்கள்.(1 கொரி.6:2; யோவான் 5:22) யோவான் 5:28,29ல் "பிரேதக்குழிகளிலுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்குங்காலம் வரும்; அப்பொழுது, நன்மை செய்தவர்கள் (கிறிஸ்தவர்கள்) ஜீவனை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும் (கிறிஸ்துவோடுகூட நித்தியமாக ஆளுகைசெய்வார்கள் வெளி 20:4) தீமை செய்தவர்கள் (உலக ஜனங்கள்) சோதிக்கப்படும்படி எழுந்திருக்கிறவர்களாகவும் புறப்படுவார்கள்." அநேக வேதாகம மொழிப்பெயர்ப்புகள் "நியாயந்தீர்க்கப்படும்படி எழுந்திருப்பார்கள்" என்று கூறுகிறது.

ஆனால் கிரேக்க மொழியில் சரியான பொருள் (Krisis) "சோதிக்கப்படும்படி எழுந்திருப்பார்கள்" என்பதாகும். ஒரு மருத்துவர்,நோயாளி ஆபத்தான நிலையில் இருக்கிறார் என்று தான் கூறுவார். ஆனால் அவர் மரிக்கபோகிறார் என்று அதற்கு பொருளல்ல. மேலும் இந்த ஆபத்தான நிலையிலிருந்து, நோயாளி குணமடையவும் வாய்ப்பு இருக்கும் அல்லது மரிக்கவும் கூடும். உலக ஜனங்களுக்கு கிறிஸ்துவின் ராஜ்யம் சோதிக்கப்படும் காலமாக (Krises or probation period) இருக்கிறது. ஆகவே, அவர்களுடைய சோதனை, இந்த உலக கிரியைகளைப் பொறுத்து அல்லாமல்,வரக்கூடிய ராஜ்யத்தில் அவர்களுடைய கிரியைகளைப் பொறுத்தே இருக்கும். மேலும் மற்ற வேதாகமக் குறிப்புகள் (லூக்கா 12:47,48:1தீமோத் 5:24)கிறிஸ்தவர்கள் அல்லாதவர்கள், இந்த வாழ்க்கையில் தங்கள் அறிவுக்கும் மனசாட்சிக்கும், கீழ்ப்படியாததினிமித்தம் தண்டிக்கப்படுவார்கள் என்று கூறுகின்றன. மேலும் உயிர்தெழுதலில் சோதனை மிகவும்

கடினமானதாக இருக்கும். எப்படியிருந்தாலும், கிறிஸ்தவர்கள் அல்லாதவர்கள் (“தீமை செய்தவர்கள்” யோவான் 5:28,29), “மற்ற ஜனங்கள்” (அப்போஸ்.15:14-17) ஆகிய இவர்களுடைய நித்திய நிலைமை எதிர்காலத்தில் தீர்மானிக்கப்படும். இதனை உயிர்த்தெழுந்த ஆண்டாவர், வெளி 22:12ல் “இதோ, சீக்கிரமாய் வருகிறேன், அவனவனுடைய கிரியைகளின்படி அவனவனுக்கு நான் அளிக்கும் பலன் என்னோடே கூட வருகிறது” என்று கூறுகிறார். உண்மை கிறிஸ்தவர்கள், கிறிஸ்துவோடுகூட ஆளுகைசெய்து,உலக ஜனங்களை, அவர்களுக்கு கொடுக்கப்பட்ட சோதனை காலமாகிய கிறிஸ்துவின் ராஜ்யத்தில், அவர்களுடைய கிரியைகளுக்குத்தக்கதாக அவர்களை நியாயம் தீர்ப்பதில் கிறிஸ்துவுடன் கூட பங்குபெறுவார்கள்.

“சோதிக்கப்படுதல்” (Krisis) என்ற வார்த்தை, அநேக மொழிகளில் இணைத்து சொல்லப்பட்டுள்ளது. சீனர்கள், இதை அடையாளமாக உபயோகிக்கின்றனர். இதை குறிப்பிட இரண்டு அடையாளங்களை உபயோகிக்கின்றனர். ஒன்று ஆபத்து மற்றொன்று வாய்ப்பு. மனுக்குலத்தின் சோதனை (Krisis) என்பது நித்திய ஜீவனை பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்பு ஆகும். ஆனால் இது ஒரு ஆபத்து காலமும் கூட. இப்படியாக நித்திய ஜீவனை பெற்றுக் கொள்ள தேவன் வைத்திருக்கும் நிபந்தனைகளில் தவறுகிறவர்கள், இரண்டாம் மரணத்திற்கு தள்ளப்படுவார்கள். (வெளி.20:13-15)

## ஆசாரியர்களும், ராஜாக்களும்

கிறிஸ்தவர்கள் நியாயாதிபதிகளாக மட்டும் அல்ல, இரக்கமும், கருணையும் நிறைந்த ஆசாரியர்களாவும் இருந்து உலகத்தில் உள்ள அனைத்து ஜனங்களுக்கும் கூடிய மட்டும் சகல நன்மைகளையும், நித்திய ஜீவனை பெற்றுக் கொள்ளுவதற்கான உதவியையும் வாய்ப்பையும் கொடுத்து ஆசீர்வதிப்பார்கள். ஆகவே இயேசுவும், சபையும் ஆளுகை செய்பவர்களாக மட்டும் அல்ல ஆசாரியர்களாகவும், ஆசீர்வதிப்பவர்க்களாகவும் இருப்பார்கள் என்று வேதம் நமக்கு எடுத்துரைக்கிறது. (1பேதுரு 2:9;வெளி 1:6;5:10;20:6) எபிரேயர் 9:23,இஸ்ரயேலரின் ஆசாரிப்புக் கூடாரம் வரப்போகிற ஆசீர்வாதமான காரியங்களுக்கு ஒரு நிழலாக இருக்கிறது என்று வெளிப்படுத்துகிறது, பாவ நிவராண நாளில் இஸ்ரேயலின் ஆசாரியர்கள் பலிகளை செலுத்திய பிறகு,அந்த வருடத்தின் மீதி

காலப்பகுதியில் ஜனங்களுக்கு போதித்து,அவர்களை நியாயம் விசாரித்து ஆசீர்வதிப்பார்கள். எபிரேயர் 5:1,2ல் இஸ்ரயேலின் ஆசாரியன் “தானும் பலவீனமுள்ளவனான படியினாலே, அறியாதவர்களுக்கும் நெறிதப்பிப் போனவர்களுக்கும் இரங்கத்தக்கவனாயிருக்கிறான்” என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இயேசு பூரணமானவராக தம்முடைய பலவீனங்களை குறித்துப் பரிதபிக்ககூடய பிரதான ஆசாரியராக இருக்கிறார். ஏனெனில் அவர் எல்லாவிதத்திலும் நம்மைப் போல் சோதிக்கப்பட்டும் பாவமில்லாதவராயிருக்கிறார். (எபிரேயர் 2:17,18;4:15)

## கிறிஸ்துவைப் போல உருவாகுதல்

இயேசு கிறிஸ்துவைப் போல் அல்லாமல், நாம் சரீர பலவீனங்களும், ஆவியில் குறைவுள்ளவர்களுமாக இருக்கிறோம். இன்னுமாக மனுக்குலத்திற்கு நேரிடுகிற உபத்திரவங்களும், சோதனைகளுமே, கிறிஸ்துவர்களாகிய நமக்கும் நேரிடுகிறது, (1கொரி.10:13) “சோதனை” என்ற வார்த்தைக்கு “பரிசோதனை” என்று விளக்கங் கூறலாம். பொதுவாக தேவனுடைய சோதனைகள் எல்லாம் நமக்கு போதிப்பதற்காக அனுமதிக்கப்படுகிறது. “தேவன் உண்மையுள்ளவராக இருக்கிறார். உங்கள் திராணிக்கு மேலாக நீங்கள் சோதிக்கப்படுவதற்கு இடங்கொடுக்கமாட்டார்.” நாம் “கிறிஸ்துவிற்குள் குழந்தைகளாக” இருப்போமானால், தேவன் சோதனைகளை நீக்கிப்போடுகிறவராக இருக்கிறார். ஆகினும் நம்முடைய பரமபிதா, எல்லா உபத்திரவம் மற்றும் “சோதனையோடு கூட அதற்கு, தப்பித்துக்கொள்ளும் படியாக போக்கையும் உண்டாக்குவார்.” மேலும் அவருடைய பரிசுத்த ஆவியின் வழிநடத்துதலின் மூலம், ஆவிக்குரிய வளர்ச்சி அடைவதன் மூலம், “சோதனையை தாங்கத்தக்கதான” பெலத்தையும் தருவார். இப்படிப்பட்ட உபத்திரவங்களை தேவன் நீக்கிப்போடுவதற்கு பதிலாக, இவற்றை எல்லாம் நாம் ஏன் சகித்துக் கொள்ளவேண்டும்? தேவன், நம்மை இரக்கமுள்ள ஆசாரியர்களாக உருவாக்குகிறார் என்பதை நினைவுகூறுங்கள். இதனை, 1பேதுரு 1:7ல் “அழிந்து போகிற பொன் அக்கினியினாலே சோதிக்கப்படும்; அதைப்பார்க்கிலும் அதிக விலையேறப் பெற்றதாயிருக்கிற உங்கள் விசுவாசம் சோதிக்கப்பட்டு, இயேசு கிறிஸ்து வெளிப்படும்போது உங்களுக்குப் புகழ்ச்சியும்

கனமும் மகிமையுமுண்டாகக் காணப்படும்." இப்படிப்பட்ட உபத்திரவங்களினால், சரியான முறையில் பயிற்றுவித்துக் கொண்ட கிறிஸ்தவர்கள் மகிமையின் மேல் மகிமை அடைந்து குணாதிசயங்களில் கிறிஸ்துவின் சாயலாகிறார்கள்.(ரோமர் 8:29;2கொரி.3:18) இவர்களுடைய பெலவீனங்கள் மற்றும் துன்பங்களின் மத்தியில், கிறிஸ்துவின் ஆவிக்குள்ளாக பயிற்சிக்கப்படுவதன் மூலம்,இவர்கள் அன்புள்ளம் கொண்டவர்களாகவும், இரக்கம் கொண்டவர்களாகவும், சகமனிதர்களை குறித்து நன்கு அறிந்தவர்களாகவும் உருவாகின்றனர்.

பொதுவாக இஸ்ரயேலின் ஒவ்வொரு குடும்பத்தில் உள்ள தலைச்சன்கள் தான், இஸ்ரயேல் தேசத்தின் பிரதிநிதிகளாக இருப்பார்கள். அதைப்போல், "முதற்பேறாரனவர்களின் சர்வசங்கமாகிய சபையும்" (எபிரே.12:23) மனுக்குலத்திற்கு உண்டான பிரச்சனைகளையும், கஷ்டங்களையும், துன்பங்களையும் அனுபவிப்பார்கள். இந்த அனுபவங்கள் எல்லாம் அவர்களை கிறிஸ்துவின் ராஜ்யத்தில் இரக்கமும், கருனையும் நிறைந்த ஆசாரியர்களாகவும், நியாயாதிபதிகளாகவும், ஆளுகை செய்பவர்களாகவும் தகுதிபடுத்துகிறதாக இருக்கிறது. உங்களுக்கு வருகிற கஷ்டமான அனுபவங்கள், மற்றவர்களில் இரக்கமும், கருணையும் நிறைந்தவர்களாக உங்களையும் உருவாக்குகிறதா?

இயேசு கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக்கொள்வதைக் காட்டிலும் உண்மை கிறிஸ்தவ வாழ்க்கைக்கு இன்னும் நிறைய காரியங்கள் இருக்கின்றன. 2பேதுரு 1:5-11ல் அப்போஸ்தலனாகிய பேதுரு, "இப்படியிருக்க, நீங்கள் அதிக ஜாக்கிரதையுள்ளவர்களாய் உங்கள் விசுவாசத்தோடே தைரியத்தையும், தைரியத்தோடே ஞானத்தையும், ஞானத்தோடே இச்சையடக்கத்தையும், இச்சையடக்கத்தோடே பொறும்மையையும், பொறுமையோடே தேவபக்தியையும், தேவபக்தியோடே சகோதர சிநேகத்தையும், சகோதரசிநேகத்தோடே அன்பையும் கூட்டி வழங்குங்கள்......... இவைகளைக் செய்தால் நீங்கள் ஒருக்காலும் இடறி விழுவதில்லை. இவ்விதமாய் நம்முடைய கர்த்தரும், இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவினுடைய நித்திய ராஜ்யத்துக்குட்படும் பிரவேசம் உங்களுக்குப் பரிபூரணமாய் அளிக்கப்படும். இவ்விதமான குணநலன்கள் நம்மிடத்தில் விருத்தியடைவதின் மூலமே, நாம் தேவனுக்கும் கிறிஸ்துவுக்கும்

முன்பாக ஆசாரியராயிருந்து, அவரோடே கூட ஆயிரம் வருஷம் அரசாளும் தகுதியை பெறமுடியும்.(வெளி 20:6)

இப்படிப்பட்ட ஒரு நம்பிக்கையுடன், கிறிஸ்துவின் பாடுகளை நாம் பார்க்கும்போது, நமக்கு வருகிற பிரச்சனைகளும், துன்பங்களும் பெரியதாக இல்லை என்ற முடிவுக்கு வரமுடிகிறது. இதனை எபி.12:2-4, “……..தமக்கு முன் வைத்திருந்த சந்தோஷத்தின் பொருட்டு,அவமானத்தை எண்ணாமல், சிலுவையைச் சகித்து, தேவனுடைய சிங்காசனத்தின் வலதுபாரிசத்தில் வீற்றிருக்கிறார். ஆகையால் நீங்கள் இளைப்புள்ளவர்களாய், உங்கள் ஆத்துமாக்களில் சோந்து போகாதபடிக்கு, தமக்கு விரோதமாய்ப் பாவிகளால் செய்யப்பட்ட இவ்விதமான விபரீதங்களைச் சகித்த அவரையே நினைத்துக்கொள்ளுங்கள். பாவத்திற்கு விரோதமாய்ப் போராடுகிறதில் இரத்தஞ்சிந்தப் படத்தக்கதாக நீங்கள் இன்னும் எதிர்த்து நிற்கவில்லையே.”

இப்படிப்பட்ட ஒரு நம்பிக்கையுடன் கிறிஸ்துவின் அடிச்சுவடுகளை நாம் பின்பற்றுவோமாக. “என் சகோதரரே நீங்கள் பலவிதமான சோதனைகளில் அகப்படும்போது……… அதை மிகுந்த சந்தோஷமாக எண்ணுங்கள்.” (யாக்கோபு 1:12)

அத்தியாயம் 4

# புதிய ராஜ்யம்

தேவன், எல்லா மனுஷருக்கும் இரட்சிப்பை கொடுத்திருக்கிறார் என்பதை 1 தீமோத்தேயு 4:10 மூலம் முன்னமே அறிந்திருக்கிறோம். அதைப்போலவே 1 தீமோத்தேயு 2:3,4ல் "எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும்,(கிரேக்க பதத்தில், சரியான அறிவை) அவர் சித்தமுள்ளவராயிருக்கிறார்" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த இரட்சிப்பானது, சத்திய அறிவை பெறுகிறதற்கு முன்பே வருகிறதாயிருக்கிறது. எல்லாருக்காகவும் இயேசு கொடுத்த மீட்கும் பொருள்(வசனம் 6),ஆதாமுக்குள் மரித்த எல்லாரும், ஆதாமின் மரணத்திலிருந்து இரட்சிக்கப்படுவார்கள் என்ற உறுதியை அளிக்கிறது. அதாவது சபையின் அங்கமாக அழைக்கப்படாத எல்லாரும் மரண நித்திரையிலிருந்து எழுப்பப்பட்டு, சத்தியத்தை அறிகிற அறிவு போதிக்கப்படும், இந்த வகுப்பினரைத்தான் யோவான் 5:28,29ல் "தீமை செய்தவர்கள்," சோதிக்கப்படும்படி அல்லது பயிற்றுவிக்கும்படி உயிர்தெழுவார்கள் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

இந்த புதிய ராஜ்யத்தில், வரலாறு காணாத கற்பிக்கும் நிகழ்ச்சியை இயேசுவும், சபையும் நிகழ்த்துவார்கள். ஏசாயா 11:9ல், "....சமுத்திரம் ஜலத்தினால் நிறைந்திருக்கிறது போல, பூமி கர்த்தரை அறிகிற அறிவினால் நிறைந்திருக்கும்" என்று கூறப்பட்டுள்ளது. ஏரேமியா 31:34ல் "......அவர்களில் சிறியவன் முதல் பெரியவன் மட்டும், எல்லாரும் என்னை அறிந்து கொள்வார்கள்" என்பதாக சொல்லப்பட்டிள்ளது. வசனம் 29 மற்றும் 30, ராஜ்யத்தில் அநேகருக்கு, முழுமையான இரட்சிப்புக்கேதுவான வாய்ப்பு கொடுக்கப்படும் என்பதை எடுத்துக்காட்டுகிறது. "பிதாக்கள் திராட்சைக் காய்களைத் தின்றார்கள், பிள்ளைகளின் பற்கள் கூசிப்போயின என்று அந்நாட்களில் சொல்லமாட்டர்கள். அவனவன் அக்கிரமத்திமித்தமே சாவான்; எந்த மனுஷன் திராட்சைக் காய்களைத் தின்பானோ அவனுடைய பற்களே கூசிப்போகும்."

## சபை முதலாவது அழைக்கப்படுவது எதற்காக?

மனுகுலத்தை ஆசீர்வதிக்க, கிறிஸ்துவின் இராஜ்ய வேலைகளில் அவரோடு கூடப் பங்குபெற சபை ஏன் முதலாவது

தேர்ந்தெடுக்கப்படுகிறது? இதற்கான ஒரு காரணத்தை,குடி பழக்கத்தில் இருப்பவர்களை திருத்துகிற உயரிய வேலையோடு ஒப்பிட்டுச்சொல்லலாம். குடிப்பழக்கத்தை நிறுத்துவதற்கான பயிற்சியில் ஏற்கனவே குடிப்பழக்கத்திலிருந்த மனிதரைக் கொண்டு பயிற்சிக் கொடுக்கப்படுகிறது. குடிபோதையில் இருக்கும் ஒருவர் மற்றவர்களிடமிருந்து எந்த ஒரு ஆலோசனையயோ உதவியையோ விரும்பமாட்டார். இத்தகைய மனிதர்களுடைய வேதனைகளையும், மனச்சோர்வுகளையும், நம்பிக்கையற்ற வாழ்க்கையும் பற்றி இந்த அனுபவம் இல்லாத மற்ற மனிதர்களுக்கு எப்படித்தெரியும்? ஏற்கனவே குடிப்பழக்கத்தில் இருந்து மீண்டவர் மட்டுமே அவரது வேதனையை அறிந்திருப்பதால் குடிப்பழக்கத்தில் இருப்பவர் அவரது உதவியை ஏற்றுக்கொள்வார். ஏற்கனவே குடிப்பழக்கத்திலிருந்து மீண்டவர் குடிப்பழக்கத்தில் இருப்பவருக்கு எந்தவொரு சூழ்நிலையிலும் அவரோடு கூட இருந்து, அவரை தைரியப்படுத்தி, இப்பழக்கத்திலிருந்து எப்படி மீள்வது என்பதற்கான ஆலோசனைகளை வழங்கமுடியும். ஆகவே ஏற்கனவே குடிப்பழக்கத்திலிருந்து மீண்ட ஒரு மனிதர் தற்போது குடிப்பழக்கத்தில் இருப்பவருக்கு மறுவாழ்வு கொடுப்பதற்கு தேவைப்படுகிறார்.

கிறிஸ்துவின் ராஜ்யத்தில், பிரேதக்குழியில் இருந்து எழுந்துவரும் ஜனங்களுக்கு, அவர்கள் கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினால், மீட்கப்பட்டு, கிறிஸ்துவும் அவரது சபையும் சேர்ந்து ஆளுகை செய்யும் ராஜ்யத்தில் இருக்கிறார்கள் என்று அறிவிக்கப்படும்.(1 கொரி.6:2) அவர்களுடைய பிரச்சனைகளை திருச்சபையார் புரிந்து கொள்வார்கள் என்பது எவ்வளவு நிச்சயமாயிருக்கிறது! ஏன்? ஏனெனில், திருச்பையாரும் முந்தி பாவிகளாக இருந்தனர். ஆகவே, மனுக்குலத்தின் பிரச்சனைகள், கஷ்டங்கள் மற்றும் மனோரீதியான நெருக்கடிகள் ஆகிய எல்லா பிரச்சனைகளையும் மனுக்குலத்தின் சார்பாக அனுபவித்தார்கள் என்று மனுக்குலம் உணர்ந்து கொள்ளும். ஏனெனில், தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்."(யோவான் 3:16) திருச்சபை ஒவ்வொரு தனிமனிதனையும் வாஞ்சையோடு கூட தேவனுக்குள்ளாக வழி நடத்தும். உண்மை கிறிஸ்தவர்களின் தனிப்பட்ட வாழ்க்கையில், பாவத்தை மேற்கொள்ளுதல், மனோரீதியான கவலைகள், துன்பங்கள்

ஆகியவைகளுடன் போராட்டங்கள் ஆகியவை (2கொரி.10:4,5 எபிரே 12:3,4) எல்லாம் "புரிந்துகொள்ளுகிற இருயத்தைக்" கொடுக்கிறது. அதன்மூலம் அவர்கள் எப்போது அறியாமையில் உள்ள ஜனங்களுக்கு தயவு செய்வது, மனமாறாத ஜனங்களை எப்போது ஒழுங்கு படுத்துவது ஆகியவைகளை இவர்கள் நன்கு அறிந்திருப்பர். (எபிரே.5:2; லூக்.12:48) இப்படியாக மறுசீரமைப்பின் திட்டம் செயல்படுத்தப்படும். மனுக்குலத்தின் பெரும்பாலானோர், நித்திய ஜீவனை பெற்றுக்கொள்ளும் பயிற்சியில் தேர்ச்சி அடைய, முழுமனதுடனும், சந்தோஷத்துடனும், போதனைகளையும், அறிவுரைகளையும், ஒழுங்குகளையும் ஏற்றுக்கொள்வார்கள். "திரும்பக் கொடுத்தலின்" திட்டத்தைப்பற்றி முன்னமே பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகள் எல்லாராலும் உரைக்கப்பட்டுள்ளது.(அப்போஸ்தலர் 3:20,21) இந்த இராஜ்யத்தில் மனுக்குலத்ததை, ஆசீர்வதிக்கும் வேலையில் பங்குபெறும் விசேஷித்த அழைப்பானது, உங்களையும் கிறிஸ்துவனாக வேண்டும் என்று தூண்டுகிறதா?

## நீண்ட கால செயல்திட்டம்

ஏதேனில் மனுக்குலம் இழந்துபோனதை அதாவது உடல்ரீதியான, மனரீதியான, நீதிநெறிரீதியான, பூரணத்துவத்தை திரும்பகொடுத்தலின் திட்டமானது, கிறிஸ்த்துவின் ஆயிரம் வருட அரசாட்சி முடியும் வரை நிறைவு பெறாது.

வெளி 20:5, "மரணமடைந்த மற்றவர்கள், அந்த ஆயிரம் வருஷம் முடியுமளவும் உயிரடையவில்லை" என்று கூறுகிறது. அநேக பூர்வீக வேதாகம பிரதிகளில் இந்த வசனம் இடம் பெறவில்லை. இந்த வசனம் நிஜமானது என்றால் அது மரித்தோர் விழித்தெழுந்திருப்பதை குறிப்பிட முடியாது. ஏனெனில் வெளி 11:15-18, ஏழாவது எக்காளம் ஊதுவதை வெளிப்படுத்துகிறது. அது கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கான காலப்பகுதியையும், மரித்தோர் நியாயத் தீர்ப்படைகிற காலப்பகுதியையும், குறிப்பிடுகிறது. தானியேல் 12:2 மற்றும் யோவான் 5:28,29 ஆகிய வசனங்களில், நன்மை செய்தவர்கள், தீமை செய்தவர்கள் என இரண்டு விதமான வகுப்பார் உயிர்த்தெழுந்திருப்பதைக் குறித்து கூறப்பட்டுள்ளது. தானியேல் 12:1, மரித்த இரண்டு வகையான வகுப்பினர் எழுந்திருக்கும் காலப் பகுதியானதும், மகா உபத்திரவக் காலப்பகுதிக்கு மிக அண்மையில்

இருக்கிறதாக விளக்கமளிக்கிறது. இந்த மகா உபத்திரவம்,ஆயிரம் வருடம் முடியும் போது அல்ல. தானியேல் 12:2ல் தீமை செய்தவர்கள், "நித்திய நிந்தையையும், இகழ்ச்சியையும்" அனுபவிப்பார்கள் என்று கூறப்பட்டுள்ளது.

வெளி 20:5, மரணமடைந்த மற்றவர்கள் (மற்ற மனுஷர்-அப்போ. 15:17) அந்த ஆயிரம் வருஷம் முடியுமளவும் உயிரடையவில்லை" என்ற சொற்றொடர் நிஜம் என்றல் இந்த விளக்கம் தெளிவானதாகும். தேவனுடைய பார்வையில், தங்கள் மனதில், நீதிநெறியில், சரீரத்தில் பூரணமடையாதவர்கள் மரித்தவர்களாக தெரிகிறார்கள். ஆகவே தான் இயேசு, "……..மரித்தோர், தங்கள் மரித்தோரை அடக்கம் பண்ணட்டும்" (மத்தேயு 8:22) என்று குறிப்பிடுகிறார். "பரிசுத்த பெரும்பாதை"(ஏசாயா 35:8)யில் வரவிரும்புகிற எல்லாரையும் சீர்படுத்தி, பூரணமானிட ஜீவியத்திற்கு கொண்டு வர ஆயிரம் வருடம் தேவைப்படுகிறது.

## புதிய இராஜ்யத்தின் ஆசீர்வாதங்கள்

ஏசாயா 35ம் அதிகாரம், வரப்போகிற இராஜ்யத்தின் அற்புதமான ஆசிர்வாதங்களை எடுத்துரைக்கிறது. "வனாந்திரமும் வறண்ட நிலமும் மகிழ்ந்து…..புஷ்பத்தைப்போலச் செழிக்கும்,"(வசனம் 1) குருடரின் கண்கள் திறக்கப்படும், செவிடரின் செவிகள் திறவுண்டுபோம்,முடவன் மானைப்போல் குதிப்பான்; ஊமையன் நாவும் கெம்பீரிக்கும். (வசனம் 5 மற்றும் 6) வசனம் 8 மற்றும் 9, பரிசுத்த பெரும்பாதையான வழியைப்பற்றி குறிப்பிடும் போது, "தீட்டுள்ளவன் அதிலே நடந்து வருவதில்லை" என்று கூறப்பட்டுள்ளது. வசனம் 9ல் "சிங்கம் அங்கே இருப்பதில்லை" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. பேதுரு, "சிங்கம்" என்று சாத்தானை அடையாளப்படுத்திக் கூறுகிறார்.(1 பேதுரு 5:8) மேலும் வெளி 20:1—3ல், ஆயிரம் வருடஅரசாட்சியில், சாத்தான் கட்டப்படுவான் (ஜனங்களை மோசம் போக்காதபடிக்கு) என்று கூறப்பட்டுள்ளது. "மீட்கப்பட்டவர்களே அதில் நடப்பார்கள்." வசனம் 10, "கர்த்தரால் மீட்கப்பட்டவர்கள் திரும்ப ஆனந்தக்களிப்புடன் பாடி, சீயோனுக்கு வருவார்கள்; நித்திய மகிழ்ச்சி அவர்கள் தலையின் மேலிருக்கும்; சந்தோஷமும் மகிழ்ச்சியும் அடைவார்கள்; சஞ்சலமும் தவிப்பும் ஓடிப்போம்" என முடிகிறது. இராஜ்யத்தின் உச்சக்கட்ட நிகழ்வுகளை வெளி 21:4 விவரிக்கிறது: "அவர்களுடைய கண்ணீர் யாவையும் தேவன்

துடைப்பார்; இனி மரணமுமில்லை; துக்கமுமில்லை, அலறுதலுமில்லை, வருத்தமில்லை, முந்தினவைகள் ஒழிந்து போயின என்று விளம்பினது."

இயேசுவும், சபையும், தேவனுடைய சித்தத்தின்படி, உலக ஜனங்கள் மீது மகிமையின் ஆசிர்வாதங்களை ஊற்றும் பாத்திரங்களாயிருப்பார். ஆகவே நீங்களும், சீஷத்துவத்திற்கான நிபந்தனைகளை முற்றிலும் நிறைவேற்றினால், நீங்களும் இந்த ஆசீர்வாதத்தின் ஒரு கருவியாக இருக்கலாம்!

அத்தியாயம் 5

# சகோதரரே, நீங்கள் அழைக்கப்பட்ட அழைப்பைப் பாருங்கள்

“எப்படியெனில், சகோதரரே, நீங்கள் அழைக்கப்பட்ட அழைப்பைப் பாருங்கள்; மாம்சத்தின்படி ஞானிகள் அநேகரில்லை, வல்லவர்கள் அநேகரில்லை, பிரபுக்கள் அநேகரில்லை. ஞானிகளை வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்தில் பைத்தியமானவைகளைத் தெரிந்துகொண்டார். ....உள்ளவைகளை அவமாக்கும்படி, உலகத்தின் இழிவானவைகளையும், அற்பமாய் எண்ணப்பட்டவைகளையும், இல்லாதவைகளையும், தேவன் தெரிந்துகொண்டார். மாம்சமான எவனும் தேவனுக்கு முன்பாகப் பெருமை பாராட்டாதபடிக்கு அப்படிச் செய்தார்.” (1 கொரிந்தியர் 1:26-29)

உலகத்தின் தரத்தை உயர்த்துவதை தவிர்த்துவிட்டு மனுக்குலத்தில் சாதாரணமானாவர்களை அழைத்து “சிறுமந்தையை” உருவாக்குவதில் தான் தேவன் தம்முடைய திட்டத்தில் அதிக முக்கியத்துவம் கொடுத்து இருக்கிறார். இது எப்படி “உள்ளவைகளை அவமாக்கும்? சரித்திரத்தை பார்க்கும்போது, மனிதனுடைய ஞானத்தின்படி பொருளாதாரத்திலும் அரசியலிலும், சமுதாயத்திலும் எவ்வளவோ சாதகமான கொள்கைகளையும் திட்டங்களையும் உண்டு பண்ணின போதும், மனுக்குலத்தின் பிரச்சனையை தீர்க்கமுடியாமல், மனிதன் தோல்வியையே அடைகிறான் என அறிகிறோம். மனிதனுக்கு மனிதன் மனிதாபிமானமில்லாமல் இருந்ததையே சரித்திரங்கள் எடுத்துரைக்கின்றன். மனித ஞானத்தின் கொள்கைகள் மற்றும் திட்டங்களில் எந்த குறையும் இல்லை. ஆனால் மனிதனுடைய சுயநலமே, எல்லா தோல்விகளுக்கும் காரணமாக அமைந்துவிட்டது. மனிதன் பாவத்தில் பிறந்து “துர்குணத்தில் உருவானான்” என்கிற வேதாகம கருத்தையும் (சங்கிதம் 51:5) சரித்திரமே உறுதிபடுத்துகிறது. பல்வேறு எதிர்பார்ப்புகளோடு, 20ம் நூற்றாண்டை மனுக்குலம் எதிர்நோக்கியது. அறிவியல், தொழில்நுட்பத்தின் மூலம், மனுக்குலம் சுபிட்சம் அடையும் என்று எதிர்பார்க்கப்பட்டது ! ஐயோ ! இந்த நூற்றாண்டும் தோல்வியையே அடைந்து. கம்யூனிசமும் தோல்வி

அடைந்தது. முதலாளித்துவமும் நலிவடையும் நிலைக்குத் தள்ளப்பட்டுவிட்டது. இதற்கு முன் சம்பவியாத கொலை குற்றங்களும், துன்மார்க்கமும், போதை மருத்துகளும், பாவச்செயல்களும் இந்த சமுதாயம் தன்னைத்தானே அழித்துக்கொண்டு இருப்பதற்கு அடையாளங்களாகும். அதே சமயத்தில், பூமியும் மாசு நிறைந்த, குப்பை நிலமாக மாறி வருகிறது. ஐந்நூறு கோடிக்கும் மேற்பட்ட ஜனங்கள் சுயத்தைப் பற்றியே முதலாவது யோசிக்கும் போது, எப்படி முன்னேற்றத்தை காணமுடியும்?

ஆகவே தேவன், "உள்ளவைகளை அவமாக்கியிருக்கிறார்." மனிதனுடைய முயற்சிகள் அனைத்தும் வீணானவைகள் என்று சரித்திரமே உறுதிசெய்துள்ளது. "மாம்சமான எவனும் தேவனுக்கு முன்பாக பெருமை பாராட்டமுடியாது. "எந்த ஒரு ஜனாதிபதியினாலும், பிரதம மந்திரியினாலும், ராஜ தந்திரியினாலும் ஒட்டுமொத்த ஜனங்களின் பொதுவான அல்லது தனிமனிதனின் கஷ்டங்களை தீர்க்க தன்னிடம் திட்டம் இருக்கிறது என்று சொல்ல முடியவில்லை. ஒரு சிலர் மட்டுமே மனிதனால் எந்த ஒரு பிரச்சனையையும், தீர்க்கமுடியாது என ஆதியிலிருந்தே அறிந்திருந்தனர். அவர்கள் தேவனுடைய வார்த்தையின் மீதுள்ள விசுவாசத்தின் மூலம், வரப்போகிற கிறிஸ்துவின் அரசாட்சியின் மூலமே, மனுக்குலத்தின் கஷ்டங்கள் முற்றிலும் தீர்க்கப்படும் என்று உணர்ந்து கொண்டனர். அவர்கள் இயேசுவை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டு, தேவனுடைய சித்தத்தை முழுவதும் செய்து முடிக்க, தங்களை முற்றிலும் அர்ப்பணித்தனர். அவர்களுடைய அழைப்பானது, ராஜாக்களும், ஆசாரியர்களும், நியாயாதிபதிகளுமாக கிறிஸ்துவோடு ஆளுகை செய்வதற்காக ஆகும். மனுக்குலத்திற்கு ஏற்பட்டிருக்கிற பொதுவான பிரச்சனைகளில், இவர்களின் பங்கிலிருந்து மீளமுடியாத நிலையில் தான் இருக்கிறார்கள். (1 கொரி. 10:13) அநேர் இந்த கஷ்டங்கள் மூலம் தங்கள் வாழ்க்கையில் கசப்பையும், விரக்தியையும் அடைகின்றனர். ஆனால் அர்ப்பணம் செய்த கிறிஸ்துவர்களையோ, எல்லா புத்திக்கும் மேலான தேவ சமாதானம் அவர்களது சிந்தைகளையும் இருதயங்களையும் காத்துக் கொள்ளும். (பிலிப்பியர் 4:7) இந்த கஷ்டங்கள் எல்லாம், பொறுமையையும், அறிவும் நிறைந்த இருதயத்தை பெற தேவன் கொடுக்கும் சந்தர்ப்பங்கள் என்று விசுவாசிக்கின்றனர். நாம் நேசிக்கின்ற ஒருவரை (கணவன், மனைவி,

பெற்றோர், குழந்தை)- இழந்துவிட்டால் மனவேதனை உண்டாகின்றது. முடம், குருடு, செவிடு போன்ற உடல் ஊனங்கள் மனிதனை குடும்பத்தை இழந்தவனாக்குகிறது. போதை மருந்திற்கு அடிமையானவர்கள், குடிகாரர், மனநோயாளி ஆகியோரை ஒருசிலர் மட்டுமே புரிந்து கொள்ளமுடியும். மேலும் மனதளவான அல்லது மாம்சீக துன்பம், துன்மார்க்கரால் மட்டும் அல்ல, நேசிக்கிறவர்களாலும் உண்டாகிறது. அவர்களுக்கு வறுமையை விட மோசமானது ஒன்றுமில்லை. அங்கே தனிமை இருக்கிறது. சிலர் தனிமையான இருண்ட நிலையையே அனுபவிப்பார்கள். அர்ப்பணம் செய்த கிறிஸ்தவர்களுக்கு, இந்த பல்வேறு அனுபவங்கள் பொறுமையை உண்டு பண்ணுகின்றன. மேலும் தேவனுடைய ஆவி, இவர்களுடைய வாழ்வின் அனுதினமும் கிரியை செய்து, இவர்களை கிறிஸ்துவின் சாயலுக்கு ஒப்பாக மாற்றுகிறது. (1 பேதுரு 1:7; 2கொரி 4:16-18)

முதலில், பாவசரீத்தோடும், அவற்றின் இச்சைகளோடும் போராட வேண்டியுள்ளது. இவைகளெல்லாம் “உள்ளான போராட்டங்கள்” என்று (2கொரி 7:5; 10:4-6; எபிரே. 10:4) குறிப்பிடப்பட்டுள்ளன. கிறிஸ்தவர்கள் விழுந்துபோன தங்கள் சொந்த மாம்சத்தோடு எதிர்த்து போராடும் போது, அது இரக்கத்தையும் மனித இருதயத்தில் உருவாகும் பாவத்தைக் குறித்த அறிவையும் கொடுக்கிறது. பிரதான ஆசாரியன், “ தானும் பலவீனமுள்ளவனான படியினாலே, அறியாதவர்களுக்கும் நெறிதப்பிப்போனவர்களுக்கும் இரங்கத்தக்கவனாயிருக்கிறான்.” எபிரேயர் 5:2

இறுதியாக, கிறிஸ்துவோடு, அவருடைய வருகையில் இணைந்து, அவருடைய ராஜ்யத்தின் மகிமையில் பங்கு பெறுவார்கள். அவரைப் போலவே (1யோவான் 3:2) இரக்கமுள்ள ஆசாரியர்களாகவும், புரிந்துகொள்ளும் நியாயாதிபதிகளாகவும், தயவுள்ள ராஜாக்களாவும் (வெளி 20:6; 1கொரி.6:2) இருப்பார்கள். மொத்தத்தில் மனுக்குலத்திற்கு உண்டாகும், பாவவியாதிகள், மனமுறிவு, உணர்ச்சி வசப்பட்டு நடக்கும் குற்றங்கள், உடல் ஊனம் ஆகிய எல்லாவற்றையும் இவர்கள் அறிந்தவர்களாக இருப்பார்கள்.

நீங்கள் ஏன் ஒரு கிறிஸ்தவனாக இருக்கிறீர்கள்? நீங்கள் தேவனை மகிமைப்படுத்த விரும்புகிறீர்களா?- எல்லோரையும்

ஆசீர்வதிப்பதன் மூலம் அவருக்கு ஊழியம் செய்ய விரும்புகிறீர்களா?- தேவன், இந்த ஊக்கமான ஜெப விருப்பத்தை கட்டாயமாக நிறைவேற்றுவார்.